NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 2 February 2017

# சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்திற்கு நான்காவது இடம்

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் உலகின் ஆக உயரிய நான்காவது பல்கலைக்கழகமாக பெயர் குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

அந்தப் பல்கலைக்கழகம் தன்னுடைய பன்முக மாணவர்கள், ஆய்வாளர் வளத்துடன் பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளின் பிரபல பல்கலைக்கழகங்களைப் பின் தள்ளிவிட்டு அட்டவணையில் முன்னேறி இருக்கிறது. 'டைம்ஸ் உலக உயர்கல்வி பல்கலைக்கழகப் பட்டியல் அமைப்பு' சிங்கப்பூர் பல்கலைக்கழகத்தை நான்காவது இடத்தில் வரிசைப்படுத்தியுள்ளது.

மொத்தம் 150 அனைத்துலக பல்கலைக்கழகங்களைக் கொண்ட பட்டியலில் ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ், ஹார்வர்ட் போன்ற பல்கலைக்கழகங்களை எல்லாம் தேசிய பல்கலைக்கழகம் முந்திவிட்டது.

இருந்தாலும் ஆசியாவின் ஹாங்காங் பல்கலைக்கழகம் பட்டியலில் மூன்றாவது இடத்திற்கு வந்துவிட்டது. சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த இடிஎச் சூரிச், இகோல் பலதுறைக் கல்விப் பல்கலைக்கழகம் ஆகியவை முதல் இரண்டு இடங்களை வகிக்கின்றன. ஒரு பல்கலைக்கழகத்தின் அனைத்துலக மாணவர்கள், அனைத்துலக ஊழியர்கள் ஆகியோரின் விகிதாச்சாரம், குறைந்தபட்சம் ஓர் அனைத்துலக இணை ஆசிரியரைக் கொண்ட சஞ்சிகை வெளியீடுகள் போன்றவற்றின் அடிப்படையில் உலக பல்கலைக் கழகங்கள் இந்த அட்டவணையில் வரிசைப்படுத்தப்படுகின்றன.

இது பற்றி கருத்துத் தெரிவித்த தேசிய பல்கலைக்கழகத்தின் தலைவர் பேராசிரியர் டான் சோர் சுவான், தேசிய பல்கலைக்கழகம் நான்காவது இடத்தைப் பிடித்திருப்பது கல்விக்கும் ஆய்வுக்கும் அது கைக்கொள்ளும் உலக அணுகுமுறைக்குக் கிடைத்திருக்கும் வலுவான அங்கீகாரமாக இருக்கிறது என்று தெரிவித்தார்.

தேசிய பல்கலைக்கழகத்தின் இளநிலை பட்டதாரிகளில் 10 பேரில் சுமார் எட்டு பேர் வெளிநாட்டுக் கல்வி அனுபவத்தைப் பெறுகிறார்கள். அவர்கள் 40 நாடுகளில் இருக்கும் 300 பல்கலைக் கழகங்களில் கல்விப்பருவ மாணவர் பரிவர்த்தனைத் திட்டங்களில் பங்குகொள்கிறார்கள்.

இந்த உயர்கல்வி நிலையம் உலகப் பல்கலைக்கழகங்களுடன் சேர்ந்து 70க்கும் மேற்பட்ட கூட்டு, இரட்டை, பட்டப்படிப்புகளைப் போதிக்கிறது.

இதற்கிடையே, இந்த டைம்ஸ் அட்டவணையின் ஆசிரியர் ஃபில் பிடே, சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகம் அனைத்துலக ஆற்றலை ஈர்க்கக்கூடிய சக்தி வாய்ந்த காந்தமாக ஆகியிருக்கிறது என்று குறிப்பிட்டார்.

அது உண்மையான உலக அறிவு மையமாகத் திகழ்கிறது என்று அவர் தெரிவித்துள்ளார். ஒரு பல்கலைக்கழகம் உலக கண்ணோட்டம் இல்லாமல், உலகளாவிய கட்டமைப்பு இல்லாமல், உலகளாவிய ஆற்றல் வளம் இல்லாமல் உலகத் தரம் வாய்ந்த ஒன்றாக ஆக முடியாது என்றாரவர்.

> “ சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகம் உண்மையான அறிவு மையமாகத் திகழ்கிறது. உலக ஆற்றலை ஈர்க்கும் சக்திவாய்ந்த காந்தமாக அது திகழ்கிறது.
>
> **டைம்ஸ் உலக உயர்கல்வி பல்கலைக்கழக அட்டவணை ஆசிரியர் ஃபில் படே**

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.